# ஏறாவூர் பற்றுப் பிரதேச சபை
# மட்டக்களப்பு மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மிளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 ஆகஸ்ட் 25 ஆந் திகதி கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2010 மார்ச் 26 ஆந் திகதி கணக்காய்விற்காக சமரப்பிக்கப்ட்டிருந்தது.

### 1.2 அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப் பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய ஏறாவூர் பற்றுப் பிரதேச சபையானது 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் எனது இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களினால் நிதிசார் கூற்றுக்களில் எற்படும் தாக்கங்களைத்தவிர பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொளகைகளுக்கு அமைய ஏறாவூர் பற்றுப் பிரதேச சபையின் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டின் நிதிசார் விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 இணங்காமைகள்

கீழே காட்டப்பட்ட விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவைகளுடன் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்வற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | சுகாதார சேவைகள் பணிப்பாளரின் 1769 ஆம் இலக்க 1992 செப்தெம்பர் 30 ஆந் திகதிய சுற்றுநிருபம் | சுற்றுநிருபத்திற்கு முரணாக ரூபா 135,317 ஆன வரைதல் கட்டணங்கள் பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்குச் செலுத்தப்பட்டிருந்தன. |
| (ஆ) | கொள்வனவு வழிகாட்டிக் கோவை இல. 3.9.1 | கொள்வனவு வழிகாட்டிக் கோவைக்கு முரணாக ரூபா 6,578,602 பெறுமதியான 11 |

| | | |
|---|---|---|
| | | சனசமூக நிலையங்களின் சிவில் வேலைகள் வழங்கப்பட்டிருந்தன. |
| (இ) | 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிகள் அதிகாரச் சட்டத்தின் 153 ஆம் பிரிவு | கொடுப்பனவுகளிலிருந்து ரூபா 7,438 தொகையான 5% நிறுத்தி வைத்தல் வரி கழிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | பொது நிருவாகச் சுற்றறிக்கை இல. 13/2008 | சுற்றுநிருபத்திற்கு முரணாக மீளாய்வாண்டின் போது ரூபா 134,284 பெறுமதியான 1,827 லீற்றர் எரிபொருள் தலைவரினால் பயன்படுத்தப்பட்டிருந்தது. |
| (உ) | கொள்வனவு வழிகாட்டிக் கோவை இல. 9.3.1 (ஆ) | அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரமின்றி வாகன பழுதுபார்த்தலுக்காக ரூபா 187,508 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (ஊ) | நிதிப்பிரமாணம் 137 மற்றும் 138 | பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரின் உறுதிப்படுத்திலின்றி பல்வேறு தேவைகளுக்கு ரூபா 201,690 தொகையானது கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (எ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 132(ஓ) பிரிவு | பாலர் பாடசாலை மாணவர்களின் வினோதப் பயணம் மற்றும் தனிப்பட்ட வைத்தியச் செலவுகளுக்காக அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாது ரூபா 13,000 தொகை நன்கொடையாக வழங்கப்பட்டிருந்தது. |

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,454,182 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டிற்கான மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,407,766 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள்

தலைவரால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள் தொடரபான நிலைமை கீழே தரப்படுகின்றன.

| | | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|---|
| | வருமான விடயம் | மதிப்பிடப் பட்டது | உள்ளபடி யானது | திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள் | மதிப்பிடப் பட்டது | உள்ளபடி யானது | திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள் |
| | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| (i) | இறைகளும் வரிகளும் | - | - | 57 | - | - | 57 |
| (ii) | குத்தகை வாடகைகள் | 3,619 | 7,749 | 3,551 | 6,440 | 2,973 | 4,131 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 750 | 993 | 134 | 958 | 939 | 244 |
| (iv) | ஏனைய வருமானங்கள் | 5,774 | 5,778 | 03 | 57,878 | 57,878 | 04 |

## 2.3 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான மதிப்பிடப்பட்டவை, உள்ளபடியான செலவினம் மற்றும் முரண்கள் என்பன கீழே தரப்படுகின்றன.

| செலவின விடயம் | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| | மதிப்பிடப் பட்டது | உள்ளபடி யானது | முரண் | மதிப்பிடப் பட்டது | உள்ளபடி யானது | முரண் |
| | ரூபா000 | ரூபா000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| மீண்டெழும் செலவினம் | | | | | | |
| ஆளணி வேதனங்கள் | 3,156 | 13,483 | (10,327) | 10,393 | 12,907 | (2,514) |
| ஏனையவை | 18,085 | 15,359 | 2,726 | 9,962 | 9,770 | 192 |
| உப மொத்தம் | 21,241 | 28,842 | (7,601) | 20,355 | 22,677 | (2,322) |
| மூலதனச் செலவினம் | 3,848 | 27,885 | (24,037) | 2,800 | 39,098 | (36,298) |
| முழு மொத்தம் | 25,089 | 56,727 | (31,638) | 23,155 | 61,775 | (38,620) |

**2.4 மனித வள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான ஆளணி**

சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான ஆளணியின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| பதவியினர் தரம் | 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
|---|---|---|
| | அங்கீகரிக்கப்பட்டது | உள்ளபடியானது |
| பதவிநிலைத் தரங்கள் | 01 | 01 |
| இரண்டாம் தரங்கள் | 18 | 17 |
| ஆரம்பத் தரங்கள் | 23 | 21 |

| | | |
|---|---|---|
| ஏனைய (அமைய/ தற்காலிக) | - | - |
| | ----------- | -------- |
| | 42 | 39 |
| | ===== | ===== |

## 2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 2.5.1 அறவிடவேண்டிய பதவியினர் கடன்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 3 ஆண்டுகளுக்கு மேலாக அறவிடவேண்டியிருந்த பதவியினர் கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,260,687 ஆக இருந்தது.

### 2.5.2 மெய்மையாய்வு செய்யப்படாத சொத்துக்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பௌதீக மெய்மையாய்வுகள் / கணிப்பீட்டுச் சபை அறிக்கை மூலம் உறுதிப்படுத்தப்படாத புத்தக மீதிகளில் கணிப்பிடப்பட்ட சொத்துக்களின் பெறுமதி ரூபா 138,735,415 ஆக இருந்தது.

## 2.6 உள்ளகக் கணக்காய்வு

சபையால் போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) உள்ளகக் கணக்காய்வு

(ஆ) வருமான நிர்வாகம்